ASIAN AMERICANS ADVANCING JUSTICE
ASIAN LAW CAUCUS

# சாண்டா க்ளாரா மாகாண வாக்காளர்களுக்கான தமிழ்- மொழி உதவி

<u>வீட்டில் இருந்து வாக்களித்தல்</u>

தேர்தல் நாளுக்கு முன்னதாக, நீங்கள் அஞ்சல் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட பொருட்களைப் பெறக்கூடும். மொழிபெயர்க்கப்பட்ட பொருட்களைப் பெறுவதற்கு, https://voterstatus.sos.ca.gov என்ற வலைத்தளத்தில் உங்கள் விருப்ப மொழியைப் புதுப்பிப்பதை உறுதி செய்யவும் அல்லது தேர்தல் அலுவலகத்தை அழைக்கவும் (866-430-8683).

நீங்கள் **தமிழ்** மொழியில் பொருட்களைப் பெற விரும்பினால், ஒரு மொழிபெயர்க்கப்பட்ட "தொலைநகல்" வாக்குச்சீட்டை அஞ்சல் வாயிலாகப் பெறுவதற்குக் கோரலாம். இது உங்கள் ஆங்கில வாக்குச்சீட்டைப் பூர்த்தி செய்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் உதவக்கூடிய ஒரு மொழிபெயர்க்கப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டாகும். (தொலைநகல் வாக்குச்சீட்டில் நீங்கள் வாக்களிக்க முடியாது). இது உங்கள் பகுதியில் கிடைக்கும்பட்சத்தில், அதனை உங்களுக்கு இலவசமாக அனுப்புவார்கள்.

உங்கள் விருப்ப மொழியில் ஒரு வாக்குச்சீட்டையோ அல்லது பொருட்களையோ பெறவில்லையென்றால், தேர்தல் அலுவலகத்தை அழைக்கவும்.

<u>நேரில் சென்று வாக்களித்தல்</u>

நீங்கள் வாக்களிப்பு மையத்திற்கு நேரில் சென்று வாக்களிப்பதாக இருந்தால், வாய்மொழி உதவியைப் பயன்படுத்தலாம். **வாக்களிப்பு உதவிக்காக நீங்கள் இரண்டு நபர்கள் வரை** உங்களுடன் அழைத்துவர அனுமதிக்கப்படுவீர்கள், ஆனால் அவர்கள் உங்கள் ஊழியராகவோ அல்லது சங்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது. ஒரு குடும்ப உறுப்பினரையோ அல்லது நண்பரையோ அழைத்து வரவும்!

உங்கள் வாக்கு மையத்தில் இருமொழிகள் பேசும் வாக்காள பணியாளர்கள் இருந்தால், அவர்கள் தாங்கள் பேசும் மொழிகளைத் தெரிவிக்கும் **ஒரு பாட்ஜ், ரிப்பன் அல்லது ஸ்டிக்கரை** அணிந்திருப்பார்கள்.

**நீங்கள் வாக்கு மையத்திற்கு நேரில் சென்று வாக்களிப்பதாக இருந்தால், நீங்கள் வாக்களிக்க பதிவு செய்திருக்கும் பகுதியில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஒரு மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் "தொலைநகல்" வாக்குச்சீட்டைப் பயன்படுத்தலாம்.** நீங்கள் தொலைநகல் வாக்குச்சீட்டில் வாக்களிக்க முடியாது ஆனால் ஆங்கில-மொழி வாக்குச்சீட்டைப் பூர்த்தி செய்ய உதவுவதற்கு மேற்கோளாகப் பயன்படுத்தலாம். கிடைக்கக்கூடிய மொழிபெயர்க்கப்பட்ட தொலைநகல் வாக்குச்சீட்டுகள் வாக்கு மையங்களில் தெளிவாக காட்சிக்கு வைக்கப்படும். உங்களுக்கு உதவுவதற்காக வாக்குச்சாவடிக்குள் எடுத்துச் செல்ல சில பிரதிகள் இருக்கும். உங்களுக்கான சரியான தொலைநகல் வாக்குச்சீட்டைக் கண்டறிய ஊழியரிடம் உதவி கேட்கலாம்.

**வாக்களிக்கும்போது ஏதேனும் பிரச்சனைகளைச் சந்தித்தால், 866-430-8683 என்ற எண்ணில் மாகாண தேர்தல் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது உதவிக்கு 888-API-VOTE (888-274-8683) என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.**